25.09.2025

CC No. 182/2024

ம.சா.1 நைனாமுகம்மது

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1) நான் எதிரி கொடுத்தாக சொல்லப்படும் காசோலையானது வங்கியில் திருப்பப்பட்ட பின்னர் எத்தனை முறை அறிவிப்பு அனுப்பினேன் என்றால் 2 முறை அனுப்பினேன். முதல் முறை அனுப்பிய அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டாரா என்றால் பெற்றுக்கொள்ளவில்லை. முதல் அறிவிப்பை எப்போது அனுப்பினேன் என்றால் 5 வது மாதம் 2024 ம் வருடம் அனுப்பினேன். தேதி நினைவில்லை. இரண்டாவது அறிவிப்பை எப்போது அனுப்பினேன் என்றால் 7 வது மாதம் 2024 ம் வருடம் அனுப்பினேன். தேதி நினைவில்லை. 2 வது முறையாக அனுப்பிய அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டார் என்றால் சரிதான். மேற்படி 2 அறிவிப்புகளையும் எனது வழக்கறிஞரான மு.அறிவழகன், இரா. மணிமேகலை ஆகியோர் என் சார்பில் அனுப்பினர். 2 வது அறிவிப்பை பெற்றுக்கொண்ட பின்னர் எதிரி எனக்கு பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரியல்ல. இல்லை. 01.10.2024 அன்று எதிரி எனக்கு பதில் அனுப்பினார் என்று சொன்னால் சரியல்ல.

2) எனக்கும் என் உடன்பிறந்தோருக்கும் இடையில் உள்ள வழக்கு விபரத்தை எனது புகாரிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரியின் சகோதரி ஜமீமா பானு என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. சைய்யது பாபா மற்றும் முகம்மது கனியை தெரியுமா என்றால் சைய்யது பாபா என் சகோதரர். முகம்மது கனி எனது சகோதரர் சைய்யது பாபாவின் மகன் ஆவார். எனக்கும் என் சகோதரருக்கும் ஏற்பட்ட இடப்பிரச்சனையில் எதிரி ஆகியோர் சமரசம் பேசினோம் என்றால் பேசவில்லை. 2023 ல்

இடப்பிரச்சனை சம்பந்தமாக சமரசம் பேசப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி சமரசப்பேச்சில் என் உடன் பிறந்தோர் மற்றும் எதிரி ஆகியோர் சமரசம் பேசினார்கள் என்றால் சரியல்ல. சமரசம் பேசப்பட்டது தொடர்பாக சையது பாபா மற்றும் முகம்மது கனியை விசாரிக்க எனக்கு ஆட்சேபணை உள்ளதா என்றால் இல்லை. எதிரி சொல்வதுபோல் எனக்கு கொடுக்கவேண்டிய அனைத்து கிரைய தொகையும் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. கிரைய தொகையை கொடுத்த பின்னர் நான் கடனுறுதி சீட்டை மட்டும் கொடுத்துவிட்டு காசோலை தொலைந்துபோய்விட்டது என்று கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. காசோலை தொலைந்து விட்டதாக நான் கூறியபின்னரே இவ்வழக்கின் எதிரி கடந்த 03.03.2023 அன்று மேற்படி காசோலையை நிறுத்தி வைக்கசொல்லி வங்கியில் சொல்லியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. முன் விரோதம் காரணமாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.09.25 15:07:43 +0530

விரைவு நீதிபதி, காரைக்குடி.( மு.கூ.பொ)